Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A. 59/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந் திகதி ஆரம்பமானது

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு௵ வைகாசிமீ ௩௧௨ (1943 ஜூன்மீ 14 திங்கட்கிழமை) [இல. ௧௧

## போசன் விழாவன்று புத்த சொற்பொழிவு

யாழ்ப்பாணத்திலுள்ள புத்தசமயத்தினர் தமது போசன்விழாக் கொண்டாட்டத்தின் நிமித்தமாக இம்மாதம் 17ந் திகதி வியாழக்கிழமை மாலை 5-45 மணியளவில் டக்டர். P. வற்பிரானுதேரா என்பவரால் 'புத்தசமயம்' என்னும் பொருள்பற்றி யாழ்ப்பாணம் பட்டினசபை மண்டபத்தில் ஒருசொற்பொழிவு நிகழ்த்த ஒழுங்குகள் செய்திருக்கின்றனர்.

## 4ம் வட்டாரத்துக்கு மீளவும் திரு. C. பொன்னம்பலம்

4ம் வட்டாரத்து அங்கத்தவராயிருந்து தமது பதவியை ராஜினாமாச் செய்த அத்வக்காத் திரு. C. பொன்னம்பலமவர்கள் இடைத்தேர்தலில் மீளவும் போட்டியின்றி அவ்வட்டாரத்துக்கு அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

## வடஇலங்கை அச்சுப் பதிப்பாளர் சங்கம்

யாழ்ப்பாணம், சனி 12

இன்று காலை 11 மணியளவில் வட இலங்கை அச்சுப்பதிப்பாளர் சங்கத்தின் இரண்டாவது கூட்டம் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயமண்டபத்தில I. P. துரைரத்தினமவர்களின் தலைமையிற் கூடியது. வடபகுதியிலுள்ள அச்சியந்திரசாலை யதிபர்களிற் பெரும்பாலோர் கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்தனர். கூட்டத்திற்குச் சமூகமளிக்க முடியாத அதிபர்கள் தமது பிரதிநிதிகளை அனுப்பியிருந்தனர்.

முதலிற் காரியதரிசி திரு. K. K. நடராஜனவர்கள் சென்ற கூட்ட அறிக்கையை வாசிக்கச் சபை அதை ஏகமனதாக அங்கீகரித்தது.

அதன்பின், இச்சங்கத்தின் பிரதிநிதியாக, கொழும்பில் நடந்த அகில இலங்கை அச்சுத்தொழிலாளர் சங்கக் கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்த திரு. I. P. துரைரத்தினமவர்கள் அக்கூட்டத்தில தாம் கேட்டதற்குப் பெற்ற பதிலைச் சபையாருக்கு எடுத்து விளக்கிக் காட்டினர். அக்கூட்டத்தோடு இக்கூட்டத்தை இணைப்பதற்கு வேண்டிய சில விளக்கங்கள்பற்றி அக்கூட்டக் காரியதரிசிக்கு எழுதியறியும்படி தீர்மானிக்கப்பெற்றது.

அதன்பின், சங்கத்தின் விதிகள் சபையாருக்கு வாசிக்கப்பெற்று அவை ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

ஏறக்குறைய 2 மணியளவிற் கூட்டம் இனிது நிறைவேறியது.

## 54 ராஜீயவாதிகளை விடுவிக்க உத்தரவு

ஆமதாபாத் யூன் 8

ஆமதாபாத் நகர டிஸ்திறிக்கைச் சேர்ந்த 54 ராஜீயக் கைதிகளை ஸபர்மதி நாஸிக் சிறைகளிலிருந்து விடுதலை செய்யும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது.

## பொலிஸ்பரிசோதகரின் மனு 'அப்பீல்'

### தள்ளப்பட்டமைக்குக் காரணம்

யாழ்ப்பாணப் பொலிஸ்தானத்தைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் தெசநாயக என்பவருக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனைக்கு மாறாக, குறித்த தெசநாயக மேல்நீதிதலத்திற்கு "அப்பீல" செய்திருந்தார்; அந்த 'அப்பீல்' மேல் நீதிதலத்திலே தள்ளப்பட்டு இங்குள்ள நீதிபதியின் தீர்ப்பே பெலப்படுத்தப்படலாயிற்று; அப்பீலைத் தள்ளும்போது நீதியாசர் காட்டிய நியாயம் வருமாறு:

"குறித்த குற்றச்சாட்டு யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிறக்ரரின் சூழ்ச்சியினால் குறித்த பொலிஸ் பரிசோதகருக்கு மாறாகச் சுமத்தப்பட்டதென்று எதிரிபக்கத்தார் சொல்லும் நியாயத்தை நான் நம்பவில்லை; எட்வாற்ஸ், இளையதம்பியென்னுமிவர்கள் சொல்லியிருக்கும் சாட்சியம் அப்படியான சந்தேகத்திற்கு இடந்தரமாட்டாது; குறித்த கதிரவேலு கடற்கரையில் நிர்வாணமான நிலையில் கிடந்ததைத் தான் நேரே கண்டேனென்று கூறியிருக்கிறான். இன்னும் எதிரிபக்கத்தாரின் சாட்சியத்திற் சந்தேகப்படக்கூடிய வாய்ப்பிறப்புக்கள் பல காணப்படுகின்றன; குறித்த எதிரிபோன்ற ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர் தம்முடைய வங்களாவிற்கு ஒருவன் ஆடாத முறையில் வந்தால், அவனைத் தான் அகப்படுத்திவிட்டால், தாம் முறைப்படி செய்யவேண்டிய கருமங்களைக் கட்டளைச்சட்டத்திற்கமையச் செய்வதேயல்லாமல் அங்குள்ள பொலிஸ் தலைவரிடம் போகவேண்டியதுமில்லை, அவருக்குத் தெரிவிக்கவேண்டியதுமில்லையாகும்; அல்லாமலும் பொலிஸ் தலைவராகிய சொயிஸா அங்கு அந்த நேரத்தில் இல்லாவிட்டால், பொலிஸ் உபதலைவராகிய ஜில்லாவிற்கு விஷயத்தை இந்தப் பொலிஸ் பரிசோதகர் உடனே தெரிவித்திருக்கலாமே; அப்படிச் செய்தலைவிட்டுக் குறித்த எதிரி சொயிஸாவின் வங்களாவிலேயே ஒரு கடிதம் எழுதிவைத்துவிட்டு வந்திருக்கிறார்; மேலும் குற்றஞ்செய்த ஒருவனை விடுதலைசெய்யும், விஷயத்தில் சொயிஸாவும் குறித்த எதிரியும் சம்பந்தப்படவேண்டிய நியாயமில்லை. பொலிஸ்தானத்திலே குறித்த சம்பவத்தைப் பதிவுசெய்தற்கு சொயிஸாவை இந்த எதிரி எதிர்பார்த்திருக்க வேண்டியதில்லை; குணசேகர என்னுஞ் சிறுவன் தான் கதிரவேலுவைச் சந்தித்தேனென்றும், குறித்த எதிரியின் மனைவியிடம் சில தகாத வார்த்தைகளைச் சொல்லும்படி கதிரவேலு தன்னைக் கேட்டதென்றும் கூறிய சாட்சியம் நீதிபதியின் மனதில் ஆதாரங்களை ஆக்கியிருக்கக்கூடும். குறித்த கதிரவேலு வீட்டிலுள்ள பெண்ணோடு பேச முயன்றான் என்ற காரணமே இந்த எதிரியைக் காத்திருந்து வழிமறித்துக் கதிரவேலுவை அகப்படுத்தும்படி தூண்டிவிட்டது.

இவ்வழக்கை விசாரணை செய்த நீதிவானும் எல்லாச் சாட்சியங்களையும் நன்கு ஆராய்ந்தபின்பே எதிரிக்குச் சிறைத்தண்டனை விதித்துள்ளாரென்பது அறியக் கிடக்கின்றது. ஆனதால் நான் "அப்பீலை" நிராகரித்துத் தீர்வைப் பெலப்படுத்துகிறேன்"

## வட ஆபிரிக்காவில் அரசியல் நெருக்கடி

### ஜெனரல் டிகால் ராஜினாமாச்செய்ய உத்தேசம்

அல்ஜியேர்ஸ், ஜூன், 11

ராயிட்டரின் விசேஷ நிருபர் அறிவிப்பதாவது:

பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் இன்றிரவு (வியாழக்கிழமை) மீண்டும் ஒரு அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. பிரெஞ்சு ஆபிரிக்க சேனையை ஒழுங்குசெய்யும் விஷயமாக ஏற்பட்ட ஒரு பலத்த தகராறு காரணமாக இந்த நெருக்கடி அபிவிருத்தியடைந்தது.

பிரெஞ்சு தேசிய விடுதலைக் கமிட்டி அதன் கூட்டத்தை ரத்து செய்துவிட்டதென்று அறிவிக்கப்பட்டபொழுது இதுபற்றிய முதலாவது செய்திகள் வந்தன.

பிரெஞ்சு ஆபிரிக்க சேனையை ஒழுங்குசெய்யும் விஷயமாக ஜெனரல் டிகால் என்னென்ன செய்யவேண்டுமென்று எண்ணியிருந்தாரோ அதற்கு மாறாக கமிட்டியின் மனோபாவம் இருந்தமையால் அவர் கூட்டத்திற்குச் செல்ல மறுத்துவிட்டாரென்ற செய்தி பின்னர் வெளியாயிற்று.

பின்னர் இன்றிரவு பத்து மணிக்கு சேனை அமைக்கும் பிரச்னைகள் உட்பட்ட பல விஷயங்கள் பற்றிய ஆலோசனைகளை ஜெனரல் டிகால் கமிட்டியிடம் சமர்ப்பித்து இது விஷயங்களில கமிட்டியுடன் ஒரு சமரசம் உண்டுபண்ணிக்கொள்வது சாத்தியமில்லையென்று அறிவித்தாரென்று இங்குள்ள அதிகார வட்டாரங்களிலிருந்து அறியப்பட்டது.

நாளைக்காலை நடைபெறும் கூட்டத்தில் கமிட்டி தனது ஆலோசனையை ஏற்றுக்கொள்ளாதபட்சத்தில் ஜெனரல் டிகால் ராஜினாமா செய்துவிட விருக்கிறார், கமிட்டிக் கூட்டத்திற்கு ஜெனரல் டிகால் போக மறுத்துவிட்ட பின்னர் அரசியல நடவடிக்கைகள் மும்முரமாக விருந்தன.

பிரெஞ்சு தேசியக் கமிட்டிக் கூட்டம் இன்று காலை நடைபெறத் தவறியதால் அல்ஜியேர்ஸில் திகில் ஏற்பட்டிருப்பதாக ராய்ட்டரின் விசேஷ நிருபர் எழுதுகிறார்.

## பண்டகசாலைச் சங்கங்களின் மகாநாடு

ஐக்கிய பண்டகசாலைகள் நடத்துவதில் ஏற்பட்டுள்ள கஷ்டங்களை நிவிர்த்தி செய்யும் நோக்கமாக ஒரு மகாநாடு 1943ம் ௵ ஜூன்மீ 12ந்உ சனிக்கிழமை மாலை 5-30 மணியளவில் பெருமாள் கோவிலடி சன்மார்க்கபோதனா வித்தியாசாலை மண்டபத்தில் கூட்டப்பெற்றது.

அத்வக்காத் திரு. S. R. கனகநாயகம் அவர்கள் அக்கிராசனம் வகித்தனர். இக்கூட்டத்திற் பின்வருந் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

### தீர்மானங்கள்

1. யாழ்ப்பாணப்பிரிவிலுள்ள ஐக்கிய பண்டகசாலைச் சங்கங்களின் அங்கத்தவர்களாயும் பிரதிநிதிகளாயும் இங்கு கூடியுள்ள இம்மகாநாட்டினர் யாழ்ப்பாணப்பிரிவின் ஐக்கிய பண்டகசாலைச் சங்கங்களின் மகாநாடாகக் கூடுதற்குத் தீர்மானிக்கின்றனர்.

2. அரசாங்கத்தின் ஆதரவையும் உதவியையும் பிரதானமாக நம்பியே ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு ஐக்கிய பண்டகசாலைகளுக்கு இன்றியமையாத பொருளகளைக் கொடுப்பதில் உணவுக்கட்டுப்பாட்டு இலாகாவும் ஐக்கியசங்க இலாகாவும் போதிய உதவிசெய்யாதிருத்தல்பற்றி யாழ்ப்பாணப்பிரிவு ஐக்கிய பண்டகசாலைச் சங்கங்களின் மகாநாடாகிய இது தனது அதிருப்தியையும் விசனத்தையுந் தெரிவித்துக்கொள்கின்றது.

3. அரிசிக் கூப்பன்களையும் மற்றைய கூப்பன்களையும் விண்ணப்பதாரர்கள் ஐக்கிய சங்கக்கடைகளுக்கு மாற்றித் தருமாறு கேட்கும்போது அவற்றை யாறறிக்கொடுப்பதற்கு மணியகாரர்களும் மற்றும் உத்தியோகஸ்தர்களும் துரதிர்ஷ்டவசமாகத் தாமதிப்பதை இம்மகாநாடு கண்டிக்கின்றது. இக்கூப்பன்களை இலகுவாகவும் கெதியாகவும் ஐக்கிய சங்கங்களுக்கு மாற்ற உதவிசெய்யுமாறு இம்மகாநாடு அதிகாரிகளைக் கேட்கின்றது.

4. உண்மையாகவே அங்கத்தவர்களின தேவையைப் பூர்த்திசெய்து கள்ளவிற்பனையையும் கொள்ளைலாபத்தையும் நீக்கும் ஐக்கிய பண்டகசாலைச் சங்கங்கள் தம்முடைய அங்கத்தவர்களுக்கு வேண்டியவற்றைப் போதிய அளவு கொடுக்கக்கூடியதாக, இப்போது கொடுப்பதைக் காட்டிலும் அதிகமான பொருள்களை அவற்றிற்குக் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தை இம்மகாநாடு கேட்டுக்கொள்கின்றது.

5. ஐக்கிய சங்கங்கள் கொழும்பிலுள்ள மத்திய ஐக்கிய மொத்த வியாபார ஸ்தாபனத்திலிருந்து நேரே ஒப்பஞ்செய்து பொருள்களைப் பெறவேண்டுமென்றிருத்தலால், பலவேறு ஐக்கிய சங்கங்களும் ஒழுங்காகப் போதியபொருள்களைப் பெறுவதிற் கஷ்டமும், தாமதமும் அடையவேண்டியிருக்கிறது. அன்றியும், மத்திய ஐக்கிய மொத்த

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானு௵
வைகாசி௴ ௩௰௧ திங்கட்கிழமை

## சாராயமும் சோர வியாபாரமும்

சிலகாலமாக மாசந்தோறும் குறிக்கப்பட்ட சிற்சில தேதிகளில் இந்த யாழ்ப்பாணப்பகுதியிலே சாராயம் வாங்கும் விஷயமாகப் பெரும் ஆரவாரமும் பிணக்கு வாக்குவாதம் சண்டை தேக ஊறுபாடு என்னுமிவைகளும் உண்டாவதைக் காண்கின்றேம். குறிக்கப்பட்ட தினங்களிற் காலை 7 மணி தொடக்கம் மத்தியானம் வரையில் பெரியார் சிறியார் சாராயங் குடிப்போர் குடிக்கப்பழகிக் கொள்ளாதவர்கள் பன்னூற்றுக்கணக்கானேர் தலைக்கு இரண்டு வெறும் போத்தல்களை எடுத்துக்கொண்டு எங்கெங்கே சாராயத்தவறணைகளுண்டோ, அங்கங்கெல்லாம் ஓட்டமும் நடையுமாகப் போவதைக் காணலாகும். தவறணைகளிலே சாராயங்கொடுக்கப்படுமென்று விதிக்கப்பட்ட நாட்களில் இப்படிச் சாராயம் வாங்கப்போவோர் தாம் செய்யும் வழக்கமான தொழில் செய்யப்போவதில்லையாம். இப்படி ஆவேசத்தோடும் ஆவலோடும் சாராயம் வாங்கப் போவோருள் அரோகதிடகாத்திரத்தோடு கூடியவர்கள் பலர் அநுகூலமடைந்து ஆநந்தத்தோடு மீண்டுவருதலையும் பலர் வெறும்போத்தலுடன் திட்டிக்கொண்டு வருதலையும் இன்னும் பலர் தாம் கொண்டுபோன போத்தல் உடைந்துபோக, தங்கள் கையிலும் மெய்யிலும் உடைந்த போத்தலோட்டினல் ஊறுற்று அதற்கு மருந்திடுவித்து மீண்டு வருதலையுங் காணலாகும். சாராயம் வாங்கப்போன விடத்திலே சண்டையுண்டாதலும் போத்தலுடைதலும் காயப்படுதலும் சகசமாய் விட்டவாம்.

இவை இங்ஙனமாக, இந்தச் சாராயக் கட்டுப்பாட்டினல் நன்மையுமுண்டு தீமையுமுண்டெனலாகும். நன்மையென்னையெனின், சாராயம் அகப்படாமையினலும், ஒருபோது அகப்பட்டாலும் அதன் உண்மையான விலையில் இருமடங்கு மும்மடங்கு, சில சமயங்களில் நான்மடங்கு ஐம்மடங்கு விலைகொடுத்தே பெறவேண்டியிருத்தலினலும், கரவிற் சாராயங் குடிப்போர் பலர் குடியா தொழிவரென்பதாம்; இன்னும் பலர் 'கிட்டாதாயின் வெட்டென மற' என்றுங்கு இத்தியபானம் அகப்படாதொழிய இதனைக் குடித்து வந்ததாகிய பழக்கத்தை அறவே மறந்துவிடுவார்களெனினுமாம்.

ஆனல் இந்தக் கட்டுப்பாட்டினல் இப்பொழுது வந்துள்ள பெருந்தீமை யென்னையெனில், அடியுண்டும் இடியுண்டும் தள்ளுண்டும் எற்றுண்டும் நெரியுண்டும் ஊறுண்டும், முகம்பாதி பண்டம்பாதி யென்ற முறையிலும் எவ்விதத்திலும் சாராயத்தை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு மீண்டுபோவோர் சாராயத்தைச் சோரமாக விற்றுப் பெருந்தொகையான பணத்தை ஈட்டிக்கொள்ளத் தலைப்பட்டுக்கொண்டனரென்பதே. இதுஉண்மையென்பதற்கு, கீழ்நீதித்தலங்களில் இப்படியானேர் பலர் பிடித்துக் கொணடுவந்து விசாரணைசெய்யப்பட்டு அபராதம் விதிக்கப்படுதலேயாகும். இந்தப் பஞ்சகாலத்திலே இப்படியான சோர வியாபாரத்தைத் தலையெடுக்கவிடுதல் புத்தியாகுமோ என்பதைத்தான் அதிகாரிகளிடங் கேட்டறிய விரும்புகிறேம்; "சாராயம் குடிப்பவன் தன்னுடைய பணத்தைத் தானே கொடுத்து, அருவிலைக்கு வாங்கிக் குடிக்கிறன். அதற்கு நாம என்ன செய்வது" என்று அதிகாரிகள் ஆசங்கித்தால், நியாயம் அப்படியல்ல, குடிகாறன் இப்படி அக்கிரமஞ் செய்வதனல் அவனைக் காட்டிலும் அதிக கஷ்டப்படுபவர்கள் அவனை எதற்கும் நம்பியிருக்கும் மனைவிமக்களாவர்; அவர்களுடைய கதியென்னவாகுமென்பதையும் அதிகாரிகள் சிறிது சிந்திக்கத்தான் வேண்டும்; சோரமாக அரிசி விற்றல் மிளகாய் விற்றல் சீனி விற்றல் இன்னுங் கட்டுப்பாட்டிற்குரிய பொருள்கள் எவைகளோ அவைகளை விற்றலால் நாட்டிற்கு வருந் தீமைகளெல்லாவற்றிலும் சாராயத்தைச் சோரமாக விற்கவிடுதல் ஆயிரமடங்கு அதிக தீமைபயக்குமென்னலாம். இந்தச் சாராய விஷயம் இப்பொழுது பத்திரிகைகளிலும் கூட்டங்களிலும் எடுத்துப் பிரதிபாதிக்கப்படுகின்றது. இச் சோர வியாபாரத்தைத் தடுத்தற்கு அதிகாரிகள் என்ன என்ன உபாயங்களைச் செய்தல் முடியுமோ அன்ன அன்ன உபாயங்களை இன்னே செய்துவிடுதல் வேண்டும். இல்லையேல் இந்நாட்டிற் பெரும் பஞ்சம் நேர்ந்து சனங்களுக்கு இன்னும் அதிக அநர்த்தத்தை விளைக்குமென்பது நிசம்.

---

## தெங்குப் பொருள் 'போர்டு'க்கு புதிய அங்கத்தவர்

காலஞ் சென்ற திரு. ஆர். ஸ்ரீ பத்மநாதனுக்குப் பதிலாகத் தெங்குப்பொருள் நிர்வாகசபையில் ஒரு அங்கத்தவராக நியமிப்பதற்குக் கைத்தொழில் வர்த்தக நிர்வாகசபை திரு. ராஜா ஹேவாவிதாரணவைத் தெரிவு செய்திருப்பதாக அறியப்படுகிறது.

இலக்கியப் பகுதி:

# பாலைக் கலி

[ க. கி. ந. ]

II

தலைவன் தலைவி மாட்டு வைத்துள்ள அன்பு, 'பிரிதல் அன்பன்று' என்று கூறக் கேட்டதும், அவன் செலவழுங்கியமையாற் பெறப்பட்டது. இனி, தலைவிக்குத் தலைவன் மாட்டுள்ள அன்பின் பெற்றி எத்தகைய தென்பது 6-ம் செய்யுளிற் கூறப்படுகின்றது. தலைவன் செலவுக் குறிப்பை அறிந்த தலைவி அவனை நோக்கி, "நீர் செல்லுங் கடுஞ் சுரத்தில் துன்பமோ அதிகம். அத்துன்பத்தை நீர் தனியாக அநுபவிக்க வேண்டாம். அத் துன்பத்திற்குத் துணையாக எம்மையும் உடன் அழைத்துக் கொண்டு செல்லுக" என்று கூறுவதை இச் செய்யுள் துறையாக வுடையது. பதினேர் அடிகளை யுடைய இக் கலிவெண் பாட்டுச் சொற்சுருக்கமும் பொருள் ஆழமும் வாய்ந்த தொன்றாகும். இதிற் காட்டின் கொடுமை கூறப்படும் பகுதியும் மிக அழகிது. இச் செய்யுளின் மாத்திரமல்ல, வேறுபல செய்யுட்களிலும் பாலை நிலத்தின் பண்பு கூறும் பகுதிகள் தன்மைநவிற்சி பெரிதும் வாய்ந்து விளங்குகின்றன.

"அக்காடோ குற்றத்தையுடைய மறவரை யுடையது. அம்மறவர் தம்முடைய மூட்டுவாயை யுடைய அம்புகளைப் போதற்கரிய காட்டிடத்து அரிய வழிகளின் கண்ணே செல்வோர் மேலே அழுத்துவர். அங்ஙனம் அழுத்துவதால் அவ் வழிப்போக்கர் உடலஞ் சுருங்கி, நீர் வற்றுகையினலே உலர்ந்து வாடுகின்ற நாவினை யுடையாரவர். மாரி வறக்கையினலே ஆங்குள்ள மரையாதானும் நீர்பெருது மராலைத் (அராலை யென்னும் ஒரு புதர்) தின்னும். அத்தகைய கொடிய வெய்யிலில் தண்ணீர் பெருத மனத் தடுமாற்றத்தையுடைய வருத்தத்தை அவ் வழிப்போக்கர் (பாவம்) தம் கண்ணீர் வீழ்ந்து உலர்ந்து வாடிய தம்நாவினை நனைக்க, அவ்வழியைக் கடந்து செல்லுவர். இத்தகைய கொடுமை வாய்ந்தது அக்காடு" (ஆதலால், நீ என்னேடு உடன் சேறல் முடியாது) என்று உடன் கொண்டு செல்ல மறுக்குந் தலைவன் பாலையின் கொடுமை கூறுகின்றன். ஈண்டு மாத்திரமன்று பிறண்டும் இப்பாலையின் கடுமை கூறப்படுதலைக் காணலாம். அப்பகுதிகளில் வரும் உவமைகளும் சிறந்தவையாகும்.

வறியவ னிளமைபோல் வாடிய
சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போற்
சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணு மிகந்துசெய்(து)
இசைகெட்டா னிறுதிபோல்
வேரோடு மரம்வெம்ப விரிகதிர்
தெறுதலின்
அலவுற்றுக் குடிகூவ ஆறின்றிப்
பொருள்வெஃகிக்
கோலைபஞ்சா வினைவராற்
கோல்கோடி யவனிழல
உலகுபோ லுலறிய வுயர்மர
வெஞ்சுரம்" (செய் 10)

என்னும் அடிகள் அழகு வாய்ந்தவை. இவை தனித்தனி ஒவ்வோரடியும் பொருளாழமும் சுவையும் பொருந்தியன.

அவ்வெஞ் சுரத்திலுள்ள உயர்ந்த மரங்கள் உலறி யிருந்தமை குடிமக்கள் கூப்பிடும்படி, கொலைத் தொழிலுக்கு அஞ்சாத அமைச்சராலே நெறி யன்றிப் பொருளை வாங்கிக் கொண்டு செங்கோல் வளைந்த அரசனுடைய குடைநிழலிற் றங்கிய உலகம் போல இருந்த தென்பார்.

"குடிகூவ ஆறின்றிப் பொருள்
வெஃகிக்
கொலையஞ்சா வினைவாராற்
கோல்கோடி யவனிழல்
உலகுபோ லுலறிய வுயர்மரம்"

என்று கூறியது அழகிதன்றே? இங்ஙனமே, அம்மரங்களி லுள்ள சினைகளையும், அவை நிழலின்றியிருந்தமையையும், அவை வேரோடு வெம்பியமையையும் முறையே வறியவ னிளமைக்கும், சிறியவன் செல்வத்துக்கும் யார் கண்ணும் தீங்கு செய்து பின்பு புகழில்லையானவனுடைய கேட்டினுக்கும் உவமை கூறியது நோக்கத் தக்கது. பிரமசரியங் காத்தலால் இளமைப் பயன் கொள்ளாது வறியனனவன் இளமைச் செவ்வியின்றி இருப்பனன்றே? அஃதே போலத் தளிர்கள் வாடின கொம்புகளையுடையவாய் இருந்தன அப்பாலைநில மரங்கள். கொடுத்தற்கு மனஞ் சிறியவனுடைய செல்வம் தன்னைச் சேர்ந்தாரைப் பாதுகாக்க மாட்டாதல்லவா? அஃதே போல தன்னைச் சேர்ந்தவர்களுக்கு நிழலின்றியிருந்தன அம்மரங்கள் யாவரிடத்தும் உலக ஒழுக்கத்தைக் கடந்து தீங்கு செய்து பின்பு புகழில்லைபானவனுடைய முடிவு காலத்தின் கண்ணே அவன் கிளைகள் மாத்திரமல்ல அவனுங் கெட்டொழிவனன்றே? அஃதே போல, அம்மரங்கள் சினையே யன்றி வேரோடே நின்று வெம்பின. என்றிவ்வாறு கூறப்பட்டிருத்தல் சுவை பயப்ப தொன்றன்றே? இயற்கையைச் சித்திரிக்குங்கால் ஆசிரியர் உலக நீதியையும் படிப்போருள்ளத்தில் உறுத்திச் செல்லும் பான்மையும் நோக்கத் தக்கது. இன்னும் அவ்வெஞ்சுரம் தறுகண்மையையுடைய மறவரை யுடையது. அம்மறவர் சுற்றுதல் அமைந்த வில்லினையுடையர்; கடைகுழன்ற வளர்ந்த மயிரினையுடையர்; பிறர்க்குக் குற்றஞ் செய்தலைப் பார்த்திருக்கும் 'வலிமுன்பின் வல்லென்ற யாக்கையர்'. புலிபோலும் நோக்கினையுடையர். அவரோ வழிச் செல்வோரிடம் பெறத் தக்க பொருள்களில்லாத விடத்துங்கூட, அவ்வழிப்போக்கர் தங்கள் அம்பு பட்டுக் கிடந்து பதைக்கின், அதைக் கண்டு மனம் மகிழ்வதற்காக வேனும் அவரைத் தொடர்ந்து சென்று அவர்தம் உயிரைக் கொள்ளுவர், ஆதலால், அவ்வழியிற் பறவைகளும் பயந்து பறவா.

(கொள்ளும் பொருளில ராயினும்
வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்
துயிர் வௌவலிற்
புள்ளும் வழங்கா) (செ. 4)

என்றிவ்வாறு பாலைநில மக்களின் மறவாழ்க்கை திறம்படத் தெரிக்கப்படுகின்றது. இன்னும் மற்றேரிடத்து,

"செருமிகு சினவேந்தன்
சிவந்திறுத்த புலம்போல
எரிவெந்த கரிவறல் வாய்புதவ
காணுவாய்ப்
பொரிமலர்ந் தன்ன பொறிய
மடமான்
திரிமருப் பேறொடு தேரல்
தேர்க்(கு) ஓட,
மரல்சாய, மலைவெம்ப, மந்தி
யுயங்க,
உரல்போ லடிய உடம்புயங்(கு)
யானை

தொடர்ச்சி 5 ம் பக்கம்

# மன்னனும் மன்னுயிரும்

திரு. ஜே. நாராயண சுந்தரமையங்கார், அவர்கள்

(முற்றொடர்)

இன்னும், இங்ஙனமே, காவற்சாகாட்டை உகைப்போனாகக் காவலனைக் கூறுவதுவிடுத்து, அதனையீர்த்துச்செல்லும் எருதாக அவனைக் கூறுதலைத் தழுவி இப்புலவர் பெருந்தகை புகன்றிருப்பதூஉம் இங்கு ஒப்புநோக்கிக் கொள்ளத் தகும். இதனை, 'ஒருத்தலைப்பாரத் தொருத்தலைப் பங்குவினூர்தி-யெருத்தின் இங்குநின் றியலவரக் குழைந்திட ருழக்கும்-வருத்தம்' (அயோத்தியா-மந்திர-66) என்றும் 'உருளுடைச் சகடம் பூண்ட உடையவன் உய்த்த காரேறு*-அருளுடையொருவன் நீக்க அப்பிணி யவிழ்ந்த தொத்தான்' (அயோத்தியா - கைகேசி. 109) என்றும் வருவனவற்றால் அறியலாம்.

மற்றும், மன்னன் மன்னுயிரோம்புவதன் கண்ணேயே யீடுபட்டு அதற்கானவை செய்வதிற் சிறிதும் சோர்விலனாகி எக்காலும் உழைத்தற்குரியனு மென்பதனைத் துறவு மேற்கொள்வான் றுணிந்த தயரத மன்னன் தன்மந்திரக் கிழவர் முன்னே,

'கன்னியர்க் கமைவருங் கற்பின்
 மாநிலந்
தன்னையித் தலகதாத் தருமம்
 கைதர
மன்னுயிர்க் குறுவதே செய்து
 வைகினேன்
என்னுயிர்க் குறுவதும் செய்ய
 வெண்ணினேன்'
(அயோத்தியா-மந்திர-15)

என்று மொழிந்ததாகவரூஉம் பாடலிற் கம்பர் பெறவைத்திருப்பதூஉங் காண்க. இன்னும், இப்பாவலர் பெருந்தகை தயரதனது அரசியற் சிறப்புரைக்குங்கால், அவன்,

'வையக முழுவதும் வறிஞன்
 ஓம்பும் ஓர்
செய்யெனக் காத்தினி தரசு செய்
 கின்றான்.' (பால-அரசியல்-12)

என்றதூஉம் இதனை வலியுறுத்தும். என்னை? இதனானே, இச்செய்யோம்புவான், வறிஞனாதலிற் பொருட்செலவுசெய்து ஏவல்செய்வார்ப் பெற்று ஓம்புமாறின்மையால் தானே ஓம்புவானாகி, ஒருசெய்யேயுண்மையான், அவன் அதுவே தனக்காதாரமாதல்பற்றித் தான் பாடுமுழுதும் பிறவழிப்படாது, வெயிலிடையுலர்ந்தும், மழையிடைநனைந்தும், பனியிடைக்கிடந்தும் தன்வருத்தம் பாராது ஆங்கேயுறைந்தும், பிறவாறு முயன்றும் அதன்கண்ணே தான் கருத்துமுழுதும் செலுத்தி அதனையோம்புமாறே, சச்சந்தமன்னன் கட்டியங்காரனென்னும் அமைச்சனிடத்துத் தன்னரசுக்குரிய வினைகளை வைத்துவிட்டுத் தான் தன்மனைவி விசையையுடன் போகம் நுகர்ந்திருந்து கழிந்ததுபோல வினைசெய்வார் பிறர்மேல் வினையைமுற்றும் வைத்துவிட்டுத் தான் போகநுகர்ச்சியிலாழ்ந்திருக்தொழியாது, எவ்வாற்றானுந் தன்வருத்தம் பாராது மன்னுயிரைத் தனக்காதாரமாகமதித்து ஓவாது ஓய்புதல் பெறவைத்தவாறுயிற்றுதலினென்க.

இன்னும், தயரதன் தான் முதுமையால் தளர்வுற்றுப் போகமிழந்து புன்மையுறுதல் கூடுமாலோ என்றும் மகப்பேறின்மையால் தன்னைப் பின்னிலையிற் பேணற்குரியாரிலராலோ என்றும் மறுகுறுது, 'எற்பின் வையகம் மறுகுறும என்பதோர் மறக்கமுண்டு' (கம்ப-பால-திருவவ-3) என்றுகூறி வருந்தியதூஉம் மன்னன் மன்னுயிரோம்பலைப் பெரிதாகக் கருதல் வேண்டுதல் பெறநின்றது காணலாம்.

மற்றும், தயரதமன்னன் மந்திரக்கிழவர்முன்னே தான் துறவு மேற்கொள்வான் துணிந்ததற்குக் கூறிய காரணங்களுள், தன் முதுமையினால் வையகங்காவலைச் செவ்விதிற்றாங்கி நடத்தச் சிறிதும் ஆற்றலின்றியிருத்தலை ஒன்றாகக் கூறியதூஉம், மாநிலங்காவலன் தன்னால் அக்காவலைச் சிறிதுங் குறைபாடுறது செவ்விதின் நடாத்த வல்லனல்லனாயகாலத்தும் தன்போக நுகர்ச்சிகருதி வாளாகழியாது, அதனை வல்லானைநாடி அவன்பால் வைத்து நீங்குதல்வேண்டு மென்பதுகாட்டி அக்கருத்தினையே வலியுறுத்துதல் நோக்கத்தகும்.

'விரும்பிய மூப்பெனும் வீடு கண்ட
 யான்
இரும்பிய லனந்தனும் இசைந்த
 யானையும்
பெரும்பெயர்க் கிரிகளும் பெயரத்
 தாங்கிய
அரும்பொறை இனிச்சிறி தாற்ற
 ஆற்றலேன்.'
(கம்ப-அயோத்தியா-மந்திர-16)

என்பது மேற்குறித்த அக்கருத்துக்கொண்ட செய்யுளாகும். இதனுள், 'விரும்பிய மூப்பெனும்வீடு' என்றதூஉம், மன்னன் தன்னலம் விடுத்து மன்னுயிர்நலத்தை மாண்புறப்பேணுந் தொண்டனாய் அதனிற் சிறிதும் சோர்வுபடாது கண்ணுங்கருத்துமாய் நின்று காவலை நடாத்தலின் அருமையும், மூப்பின்கண் அச்சுமை யொழிந்துநிற்றலின் அஃது அதற்கு வீடாதலும், அதனானே அம்மூப்பு தான் போகமிழத்தற்குக் காரணமாதல்பற்றி வெறுக்கப்படுவதொழிந்து விரும்பப்படுவதாதலும் விளங்கின்றவாறு நினைக்கத்தகும்.

இன்னும், மன்னுயிர்க்கிறையாவானுக்கு, அந்நிலை போகசாதனமாய் இன்பத்தையூட்டி நிற்றலினும் வருத்தமே பெரிதும் தருவதொன்றாமென்பதனை 'இனி அவன்* வருந்த யான் பிழைத் துய்ந்தனன் போவதோர் நெறுதியெண்ணினேன்' (கம்ப - அயோத்தியா-மந்திர - 27) என்று தயரதமன்னன் தன் மந்திரக்கிழவர்முன் மொழிந்ததனானும், அவன இராமனைநோக்கி அரசேற்குமாறு கூறும்போது,

'........ அரும்பெரு மூப்பும்
வெய்ய தாயது வியலிடப் பெரும்
 பரம் விசித்த
தொய்யன் மாநிலச் சுமையுற
 சிறைதுறந் தினியான்
உய்ய லாவதோர் நெறிபுக வுதவிட
 வேண்டும்'
(அயோத்யா மந்திர 62)

என்றும்,

'................................
இன்னும் யானிந்த அரசிய லிடும்
 பைய தென்றால்
நின்னை யின்றுள பயத்தினின்
 நிரம்புவ தியாதோ?'
(அயோத்தியா-மந்திர-65)

என்றும்,

'ஒருத்த லைப்பாரத் தொருத்தலைப்
 பங்குவி னூர்தி
எருத்தி னீங்குநின் றியல்வரக்
 குழைந்திட ருழக்கும்
வருத்தம் நீங்கிஅவ் வரம்பறு
 திருவினை மருவும்
அருத்தி யுண்டெனக் கையவி
 தருளிட வேண்டும்.
(அயோத்தியா-மந்திர-66)

என்றும், உரைத்ததனாலும், 'ஆழிசூழுலகமெல்லாம் பரதனேயாள... தாழிருஞ்சடைகள் தாங்கித் தாங்கருந் தவம் மேற்கொண்டு பூழிவெங்கானம் நண்ணிப் புண்ணியத்துறைகளாடி ஏழிரண்டாண்டில்' மீண்டு வரல்வேண்டு மென்பது மன்னவன் பணியெனக் கைகேயிவாய்க்கேட்ட இராமனைக் குறித்து,

'.....................................
இருளுடை யுலகம் தாங்கும் இன்ன
 லுக் கியைந்து நின்றான்
உருளுடைச் சகடம் பூண்ட உடை
 யவ னுய்த்த காரேறு
அருளுடை யொருவன் நீக்க அப்
 பிணி யவிழ்ந்த தொத்தான்'
(அயோத்தியா-கைகேசி-109)

என்று நம் கவிச்சக்கரவர்த்தி கூறுவதனானும் உணரலாம். இவற்றுள், 'வியலிடப் பெரும்பரம் விசித்த தொய்யன் மாநிலச் சுமையுறு சிறை' என்றதனால், மாநிலந்தாங்கும் மன்னற்கு அது பெருஞ்சுமையாதலும், அதன்காவல் அவன்றனக்குக் காவலிட்டதோர் சிறையாதலும் அறியலாம். இதனானன்றே, அத் தயரதமன்னன், இராமனை அரசேற்குமாறு கூறுங்கால், அது இராமன் தன்னைப் பயந்தானுக்கு அவன் வேண்டிக்கொள்வ தொன்றனைத் தருவதோருபகாரமாகக் கருதுதல்காட்டி, 'நிற்பயந்தெடுத்த யான் நின்னை வேண்டியெய்திட விரைவ தொன்றுளது' (கம்ப-அயோத்தியா-மந்திர-61) என்றதூஉம், 'உதவிடவேண்டும்' (ஷை-62) என்றும், 'அருளிடவேண்டும்' (ஷை. 66) என்றும், 'தருதியிவ்வரம்' (ஷை. 71) என்றும் வேண்டியதூஉமென்க.

மற்றும், தன்போகங்கருதாது மன்னுயிர்வருத்தம் நீக்கிப் பொருள்கொண்டு, நடுவுநின்று முறைசெய்யும் அரசியலின் அருமை,

'கோளு மைம்பொறியுங் குறையப்
 பொருள்
நாளுங்கொண்டு நடுவுறு நோன்மை
 யின்
ஆளும் அவ்வர சேயர சன்னது
வாளின் மேல்வரு மாதவம் மைந்
 தனே'
(கம்ப-அயோத்தியா - மந்தரை-14)

என வசிட்டமுனிவன் இராமனுக்கு வகுப்பதாக வரூஉம் பாடலானும் அறியப்படுகின்றது. இதனுள், கோளும் ஐம்பொறியும் குறையப் பொருளகொண்டு' என்றது, தன்போகங்கருதிக் குடிமக்கள்பாற் கொடுவரிபோன்றன கொள்ளாது, அவர்நலத்திற்காக அவர்பாற் கொள்ளற்பொத்தனவாய பொருள்கொண்டு என்றவாறு. 'கோள்' என்றது பொறிகளாற் கொள்ளப்படும் புலன்களை யுணர்த்திற்று. ஐந்தென்பதனை முன்னுங்கூட்டி ஐங்கோளும் எனவும் உரைத்துக்கொள்க. ஐங்கோளும் குறைய என்றது, தனது நுகர்ச்சிக்கென்று பலபடப்படைக்கும் ஐம்புலன்களும் குறைய என்றவாறு. ஐம்பொறியுங்குறைய என்றது, புலன்களின்மேற் பொறிகளோர்ந்தும் ஓடுதல் குறைய என்றவாறு. இவ்வாறாகவே, தனது போகநுகர்ச்சி கருதி அதற்கான புலன்களைநாடிப் பலபடப் படைத்துக்கோடலிற் கருத்தைச் செலுத்தாது, ஐம்பொறிகளானும் போகநுகர்ந்திருத்தலைக் குறைத்துப் பெருஞ்செல்வத்திடையிருந்தும் உள்ளத்துறவியாய்நிற்க வேண்டுதல் பெறவைத்ததாயிற்று. நடுவுநோன்மையாவது: அடைந்தார், அடையாதார், முன் உதவி செய்தார், அது செய்யாதார், தான், பிறர் என்பன போன்ற திறங்களுள் ஒருபாற்கோடாத விரதமாம். 'வாளினமேல்வரும் மாதவம்' என்றது, வாண்முனைநின்றுசெய்யும் பெருந்தவம்போல் அருமையுடைத்தென்றவாறுமென்க. இவ்வாற்றானே இவ்வரசியலின் அருமைவிளங்குதல் காண்க. (வரும்)

* ஏறு — எருது.

* அவன் - (இங்கு) இராமன்.

# மங்கையர்க்கரசியார் புராண ஆராய்ச்சி

(இணுவை, வை. அனவரத விநாயகமூர்த்தி)

(முற்றொடர்)

'வளவர் திருக்குலக் கொழுந்து, தென்னர் குலப்பழிதீர்த்த தெய்வப்பாவை என்னுந் தொடர்களிலும் பிறந்தகுலம் புகுந்தகுலம் இரண்டும் புகழ்விளங்கத் திருநீற்றொளி பரப்பிய தேவியாரைத் தங்கள் குலக்கொடியாகவும் மனைத்திருவாகவும் முறையே அடைந்த சோழ பாண்டிய குலங்களின் அருந்தவப் பெருமை தொனிக்கின்றது. 'எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளினாலே இருந்தமிழ் நாடுற்ற விடர் நீக்கித் தங்கள் பொங்கொளி வெண்டிருநீறுபரப்பினரைப் போற்றுவார் கழல் எம்மாற் போற்றலாமே' என்னும் தொடரிலும் தங்கள் என்னும் சொற்பிரயோகம் கவனிக்கத்தக்கது. திருநீற்றை வெறுக்குஞ் சமணர், புத்தர்போலத் 'தங்கள் திருநீற்றைப்பரப்பினர்' என்று ஆசிரியர் சேக்கிழார் கூறுவதேன்?' எங்கள்பிரான் சண்பையர்கோன் என்றதும்போல எங்கள் திருநீறு என உரிமை பாராட்டுவதை ஒழித்துத் தம்உரிமைவிலக்கித்'தங்கள்திருநீறு என ஆசிரியர் கூறுதற்குப் போதிய காரணம் வேண்டுமல்லவா? காரணமும் தூரத்திலில்லை. "இருந்தமிழ்நாடுற்றவிடர் நீக்கிப் பொங்கொளி வெண்டிருநீறு பரப்பினர்" என்பதிலேயே இக்காரணம் அடங்கியிருக்கிறது. தமிழ்நாடு சமணிருளால் மூடப்பட்டு நீற்றொளிமங்கியிடருற்றகாலை மங்கையர்க்கரசியார் நீற்றுநெறியின் வழுவாது தம்மைக்காத்துச் சம்பந்தபெருமானுடைய அருளினாலே தம்முடைய கணவனையும் சமணசமயப்படுகுழியினின்று கரையேறச்செய்து பாண்டிநாட்டுக்கும் தென்னர் குலத்துக்கும் வந்த பழியையும் துடைத்து நீற்றொளி பரப்பித் தமிழ்நாட்டில் சைவசமய புனருத்தாரணத்திற்குக் காரண பூதராக இருந்தனர். மாணியாரும் ஞானசம்பந்தரும் புனருத்தாரணம் செய்ய" வந்திலரேல் நீறெங்கே? மாமறை நூல்தான் எங்கே? எந்தைபிரான் ஐந்தெழுத்தெங்கே?" மங்கையர்க்கரசியாரும சம்பந்தப்பெருமானும் நீற்றொளி உலகில் நிலவுமாறு செய்ததால் வேறெவர்க்கும் இல்லாத பேரிருமை திருநீற்றினிடம் உடையர் என்பதை உட்கொண்டே ஆசிரியர் சேக்கிழார் "தங்கள் திருநீறு" என அவ்விருவர்க்கும் மட்டுமே திருநீற்றுரிமை கூறினர். அம்மையாரது பேரன்பின் திறத்தை விளக்கும்பொருட்டு திருக்களிற்றுப்படிச் செய்யுள் ஒன்று இங்கே காட்டுகின்றாம்.

சுரந்த திருவடிக்கே துய்யசிவ
 ஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனக்
 கேட்பச்—சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி
 மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்த
 வாறு"

சிவப்பிரகாச சுவாமிகளும் இவ்வம்மையாரது பேரன்பை வியந்து

இலைபடர்ந்த பொய்கையிடத்
 தழுதல் கண்டு
முலைசுரந்த அன்னையோ முன்
 னின்—நிலைவிளம்பக்
கொங்கை சுரந்தஅருட் கோம
 களோ சம்பந்தா
இங்குயர்ந்தாள் ஆர்சொல்
 எனக்கு".

என்று பாடியுள்ளார்.

"அம்மே! அப்பா!! என்று குழந்தை அழுதபின் வந்து தந்தையின் உத்தரவின் பேரில் வள்ளத்தில் பால்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# தமிழ் இலக்கிய வரலாறு

(டக்றர். க. கணபதிப்பிள்ளை அவர்கள்)

உணவைவிட மனிதனுக்கு இன்றியமையாதவற்றுள் காதல் அல்லது அன்பு என்பதே முக்கியம். அது எவ்வாறு பண்டைத்தமிழ் மக்களுக்குள் இருந்ததென்பதை முன்னே காட்டினும். அதற்கு அடுத்தபடியாய் வருவது, போர். அதுவும் எவ்வாறு தொடங்கித் தமிழ் மக்களுக்குள் நடந்து வந்ததென்பதை இப்போது ஆராய்வாம்.

பண்டைக்காலத்து மனிதனுக்குப் பிரதானமான செல்வம் மந்தையாகும். ஒருவன் மந்தையின் அளவிலிருந்தே அவன் செல்வம் அறியப்பட்டது. ஆதிகாலந்தொட்டுத் தமிழ் மக்கள் மாட்டுமந்தையையே பேணி வந்தனர். தமிழருக்குள் போர் என்பது தொடங்கியது இம்மந்தையின் காரணமாகத்தான். ஒரு தலைமகன்கீழ் இருக்கும் மந்தையை வேறொரு தலைமகனது வீரர் கவர்ந்து சென்றால் இருதலைமக்களுக்கும் இடையில் போர் நிகழும். இப்போர் நிகழ்ந்த முறையைச் சிறிது விரித்துரைப்பாம்.

தலைவன் ஒருவனின் பக்கத்து வீரர் வேறொரு தலைவனின் மந்தைகளைக் கவர்வர். அவ்வீரர் அத்தகைய செயலுக்குச் செல்லும்போது வெட்சிப்பூவினால் கட்டிய மாலையைச் சூடிச் செல்வர். இதையறிந்த மற்றத் தலைவன் தனது வீரரை அனுப்பி அந்நிரைகளை மீட்பன். அவற்றை மீட்கும் வண்ணம் செலலும் அவன் வீரர் கரந்தைப்பூவினால் செய்த மாலையைச் சூடிப் போவர். இதன் காரணமாக இருதலைவருக்கும் போர் மூண்டுவிட்டால் ஒருவன் மற்றவனுக்கு உறைவிடமாயிருக்கும் நகருக்குத் தனது வீரருடனே படையெடுத்துச் செல்வன். அவ்வாறு செல்லும்போது அவனும் அவன் படைவீரரும் வஞ்சியென்னும் கொடியின் பூவினாலாய மாலையைச் சூடிப்போவர். இவ்வாறுபோன தலைவனும் அவன் வீரரும் மற்றையோனுடைய நகரத்து மதிலை அழிப்பர். அங்ஙனம் அவர் அழிக்கும்போது உழிஞையென்னுஞ் செடியின் பூவை மாலையாகக் கட்டிச் சூடிக்கொள்வர். அப்பொழுது அம்மதிலை நகருக்குள் இருக்கும் தலைவனும் வீரரும் காப்பர். அவ்வாறு காக்கும்போது நொச்சி மரத்துப் பூவினால இயற்றிய மாலையை அணிந்துகொள்வர். அஃதன்றித் தலைவரிருவரும் வெளியேவந்து படைகலந்து சிலவேளைகளில் எதிர்த்துப் போர்புரிவதுண்டு. அப்பொழுது இருபக்கத்தாரும் தும்பைச் செடியின் பூமாலையை அணிந்து கொள்வர். பின்னர், இவ்வண்ணம் இருவரும் போர்புரிந்து ஈற்றில் வெற்றிகொண்டவன் உடனே வாகைமரத்துப் பூவினாலாய மாலையைச் சூடிக்கொள்வன். முதன் முதலில் அவர் போருக்கு இவ்வகையான பூக்களைச் சூடிச்சென்றதற்கு ஒரு காரணமும் இல்லாதிருக்கலாம். அந்த அந்த நிலங்களில் இலகுவில் அகப்படக்கூடிய பூக்களை மாலையாகப் புனைந்து சென்றனர் போலும். பின்னர்த்தலைவரும் அவர் வீரரும் தாம் செய்வது எத்தகையபோர் என்று தம்மைக் கண்டோர் தெரிந்துகொள்வதற்குப் போலும், போரின் வேறுவேறு செயலுக்கு வேறுவேறு பூக்களை அணிந்தது.

அந்த அந்த நிலங்களிலுள்ள தலைமக்களை அவரவர் காதலொழுக்கத்தால் எழுந்த உள்ளத்து நிகழ்ச்சிகளைக் குறித்துப் புலவர்கள் புனைந்து பாடியதுபோலவே, போரின் காரணமாய் நிகழும் புறத்தொழில்களையும் பொருளாய்க்கொண்டு பரிசில்வேண்டி நின்ற புலவர்கள் அத்தலைமக்களைப் புகழ்ந்து பாக்களை இயற்றிப் பாடினர். மேலும் இப்போர் நிகழ்ச்சிகளும் அவற்றின் வேறுபாடுகளும் ஒரு நிலத்துள்ளோர்க்கு மட்டுமன்று; எல்லா நிலத்துக்கும் பொதுவாயபோலும்.

இவ்விதமாய்ப் பலகாலஞ் சென்றபின்னர் முன்னே காட்டிய ஐந்து நிலங்களிலும் வாழ்ந்த மக்களும் மெல்லமெல்ல வந்து ஒன்றுகூடத் தொடங்கினார்கள். இவ்வாறு ஒன்று கூடியவுடன் அவர் யாவரும் தமக்குப் பொதுவாய ஒரு தலைவனை ஏற்படுத்தி அவனுக்குங் கீழ் வாழத்தொடங்கினார்கள். தென்னாட்டில் வந்து கூடியவர் பாண்டியர் என்னும் வகுப்பாருள் ஒரு தலைவனையும் மேற்குநாட்டில் வந்து கூடியவர் சேரர் என்னும் வகுப்பாருள் ஒரு தலைவனையும், வடக்கே குடியேறியவர் சோழர் என்னும் ஒரு வகுப்பாருள் ஒரு தலைவனையும் ஏற்படுத்தினர் போலும். இத்தகைய நிலை வந்தெய்தியதும் "திணை" என்னுஞ்சொல் முன்போல நிலத்தைக் குறியாது. அந்நிலங்களிலே நடந்து வந்த ஒழுக்கத்தையே குறிக்கத் தொடங்கியது. இதற்கு எடுத்துக்காட்டாக நெய்தல் நிலத்தை எடுத்துக் கொள்வோம். ஆதியில் 'நெய்தற்றிணை'யென்றால் 'நெய்தல் நிலம்' என்ற பொருள்படும். புலவன் ஒருவன் நெய்தற்றிணையிலுள்ள தலைமகனொருவனைப் பாடுமிடத்து அவன் காதல் ஒழுக்கத்திற் சிறந்த பகுதியாய "தலைவி தலைவன் பிரிவாற்றாது இருந்து இரங்கல்" என்னும் ஒழுக்கத்தை எடுத்து அந்நிலத்துள்ள மா, பூ, மரம் முதலிய கருப்பொருள்களோடு புனைந்து அழகுபெறப் பாக்களைப் பாடுவன். இஃது நெய்தல் நிலத்துள்ளார் புறம்பாய் ஏனைய நிலத்து மக்களோடு கொஞ்சமேனும் தொடர்பின்றி வசித்த காலத்தில் நடந்தது. ஆனால் பின்னர், ஐந்துநில மக்களும் ஒருங்கு சேர்ந்து நெய்தற்றிணையென்றால், நெய்தல் நிலத்திற்குரிய ஒழுக்கத்தையே குறித்தது. அக்காரணத்தினாலே நெய்தற்றிணைக்கு உரிப்பொருள் இரங்கல் என்பர். அதுபற்றியே ஒரு புலவன், காதலி தன் காதலனைப் பிரிந்திருந்து இரங்குதலைப் பாடுமிடத்து அவர் எந்த நிலத்துக்குரிய மக்களாய் இருந்தாலும் நெய்தல் நிலத்துக்குரிய கருப்பொருளை வைத்துப் பாடுவன். ஏனைய திணைகளும் அப்படியே. இதன் காரணமாக, ஒவ்வொரு ஒழுக்கத்தைப் பாடுமிடத்து பண்டைக்காலத்து அவ்வொழுக்கம் பெரும்பாலும் நடந்துவந்த நிலத்தின் கருப்பொருளையும் வளனையும், ஐவகை நிலப்பாகுபாடு அற்றுப்போனபோதும், வைத்துப்பாடுதல் ஒரு புலனெறி வழக்கம் அல்லது புலவர் முறை ஆக வந்துவிட்டது.

தமிழ் மொழியில் இன்று காணப்படும் பழைய பாக்கள் இப்புலனெறி வழக்கம் உண்டுபட்ட பின்னரே பாடப்பட்டவைகளாகும். இஃது இவ்வாறு வந்ததும், புலவர்கள் திணையை அல்லது ஒழுக்கத்தை அகத்திணையென்றும் புறத்திணையென்றும் இரண்டாகப் பிரித்தனர். பண்டைக்காலத்திலே நிலப்பாகுபாட்டால் ஏற்பட்ட திணை ஐந்தனோடும் கைக்கிளை பெருந்திணை என்னும் இரண்டனையுஞ் சேர்த்துத் திணை ஏழு என்றழைத்தனர். கைக்கிளை என்றால் தலைவியோ அல்லது தலைவனோ ஆகியவரில் ஒருவரிடத்து மட்டுமே காணப்படும் காமமாகும். பெருந்திணையென்றால் தலைவிக்கும் தலைமகனுக்கும் பொருந்தாத காமமாகும். இதுமட்டுமன்றி, ஒவ்வொரு திணைக்கும் கருப்பொருள், உரிப்பொருள் என்ற இரண்டனையும் வகுத்தனர். இவ்வொழுக்கம் யாவும் உள்ளத்திலேயே அநுபவிப்பதாய், மற்றும் புறத்தார்க்குப் புலனாகாதிருப்பதால் இதை அகவொழுக்கம் அல்லது அகத்திணையென்றனர்.

அதன்பின் இவ்வேழு அகவொழுக்கத்துக்குச் சரியாய்ப் புற ஒழுக்கத்தையும் வகுத்தனர். போர்முதலிய, தான்மட்டுமன்றிப் பிறரும் அறியக்கூடிய புறம்பான ஒழுக்கம் அல்லது செயல் ஆனபடியால் அவற்றைப் புறவொழுக்கம் அல்லது புறத்திணை என்றார். முன்னே காட்டிய வெட்சி, கரந்தை முதலிய பூக்களைச் சூடிச் செய்யும்போரை வெட்சித்திணை, கரந்தைத்திணை எனப் பெயரிட்டு அவற்றைப் புறத்திணை என்றழைத்தனர். ஏனையவற்றையும் இவ்வண்ணமே அழைத்தனர். அன்றியும், ஒவ்வொரு அகத்திணைக்கும் இவைஇவை புறத்திணை என்றும வகுத்தனர். அதாவது குறிஞ்சித் திணைக்கு வெட்சி, கரந்தையும், முல்லைத்திணைக்கு வஞ்சியும், மருதத்திணைக்கு உழிஞை, நொச்சியும், நெற்தற்றிணைக்குத் தும்பையும், பாலைத்திணைக்கு வாகையும், பெருந்திணைக்குக் காஞ்சியும், கைக்கிளைக்குப் பாடாணும் புறத்திணைகளாம்.

இவையெல்லாம் ஐவகை நிலமக்களும் வந்து ஒன்றுகூடினபின் எழுந்த பாடல்களைப் பார்த்து இலக்கணங்களை எழுதியோர் வகுத்துக் கொண்டவை. இப்பாகுபாட்டின் இலக்கணங்களை முதன்முதற் கூறிய இலக்கணம் அகத்தியம் என்பர். அகத்தியம் இவ்வாறு இலக்கணம் வகுத்துக் கூறியதனால் அவ்வாறு இலக்கணம் கூறுதற்கு இலக்கியமாயமைந்த திணை வகுத்துப் பாடிய பாக்கள் அக்காலத்துப் பல இருந்திருக்கவேண்டும். ஆனால், இப்போதோ அவ்விலக்கியங்களுமில்லை, அவ்விலக்கியங்களி னிலக்கணத்தைக் கூறிய அகத்தியமும் இல்லை. அவையாவும் இறந்துவிட்டன.

—வித்தியா சமாச்சாரப் பத்திரிகை


### தேவை

யாழ்ப்பாணம் பெண்கள் கைத்தொழிற்பாடசாலைக்கு ஓர் அநுபவம்மிகுந்த மேற்றறன் (Matron மேற்பார்வைக்காரி) தேவை. இருக்க அறையும் சாப்பாடும் தகுதிக்கேற்ற சம்பளமும் பள்ளிக்கூடத்தில் உண்டு. விரும்புவோர் 30.6-43 திகதிக்குமுன் நற்சாட்சிப் பத்திரத்துடன் விண்ணப்பப் பத்திரம் அனுப்பவும்.

(Mrs.) R. பொன்னம்பலம்,
காரியதரிசி.

Mis. 48. 7, 14, 21, 28-6-43



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,36700**

**100** ரூபா விகிதமான **8000** பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.

Y164 A. 21-11-41—20-11-42 (தி)





## சிறுபிள்ளை வைத்தியத்திலும் ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற சில்லாலை முத்துவைத்தியசாலை

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்றோட்டம் காய்ச்சல்முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரியபெரிய மருந்துகளும் நெடுநாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம்வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம்ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரே சீராய் நடத்தும் அரசினரின் அங்கீகாரம்பெற்ற சில்லாலை முத்துவைத்தியர்

அ. செபஸ்தியாம்பிள்ளை. பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்

(Q. 30. 11-5.43—10-8.43)

## நகரின் உணவுவினியோக நிர்வாகம்

### அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக்கொள்ள ஏற்பாடு

கொழும்பில் அரிசியையும் மற்றும் உணவுப் பொருள்களையும் விநியோகிக்கும் பொறுப்பை அரசாங்கம் நகரசபையிடமிருந்து எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட உணவுப்பொருள் விநியோக வேலையைக் கவனிப்பதற்கு மூன்று சிவில் சேவிஸ் அதிகாரிகளும் கிளறிக்கல் சேவிஸைச் சேர்ந்த சில உயர்தர அதிகாரிகளும் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனரென்று தெரியவருகிறது.

இவ்வுத்தியோகஸ்தர்களிற் சிலர் இப்பொழுதே நகரசபை உணவுக் கட்டுப்பாட்டு உதவி அதிகாரியின் காரியாலயத்தில் தங்கள் வேலைகளைப் பழகிவருகின்றனர். உணவுப் பொருட் கட்டுப்பாட்டு வேலையை நகரசபை உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் எவ்வாறு நடத்துகின்றனரென்று அறிந்துகொள்ளும் பொருட்டே குறித்த உத்தியோகஸ்தர்களை அரசாங்கம் நியமித்திருக்கிறது.

நகரசபையின் உணவுப்பொருள் விநியோகப் பொறுப்பை அரசாங்கத்திடம் மாற்றவேண்டுமென்று இறுதியில் தீர்மானிக்கப்பட்டால் அவ்வாறு பொறுப்பை ஒப்புக் கொடுப்பதற்குச் சில நாட்களாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சிறந்த சேவை வற்புறுத்தப்படுகிறது

நகரசபை உணவுப்பொருள் விநியோகத்தை நடத்துவதனுல் பொதுஜனப் பாதுகாப்பு உணவுக் கமிஷனர் விதித்துள்ள நிபந்தனைகளை அனுஷ்டித்தே தீரவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. குறித்த நிபந்தனைகளின் பிரகாரம், உணவுப்பொருட் கடைகளின் சிப்பந்திகள் உடனே அதிகரிக்கப்பட வேண்டுமெனத் தெரிகிறது. அதுவுமன்றி, கடைகள் தினந்தோறும் மாலை 7 மணிவரையாவது திறந்திருக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. மேலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் இக் கடைகளில் வேலை நடைபெறவேண்டுமென்றும் அத்தினங்களில் வேலை பார்ப்பவர்களுக்கு வாரத்தில் மற்றொரு தினத்தில் ஓய்வு இருக்கவேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

பொதுஜனங்கள் தங்களுக்குரிய உணவுப் பொருட்களைக் கஷ்டமின்றிப்பெற்றுக்கொள்ளும்பொருட்டுக் கடைகளைச் சீர்திருத்தவேண்டுமென்றும் கடைகளிற் கூடுதலான இட வசதிகளை அமைக்கவேண்டுமென்றும்இதுவரையுள்ளதைவிடச் சிறந்த சேவையை ஒழுங்கு செய்ய வேண்டுமென்றும் பொதுஜனப் பாதுகாப்புக் கொமிஷனர் வற்புறுத்துவதாகச் சொல்லப்படுகிறது,

---

## கொழும்பு விவேகானந்த சபை

நிகழும் சுபானு௵ வைகாசி௴ 24ந்திகதி திங்கட்கிழமை (7-6-43) பிற்பகல் 5-30 மணியளவில் ஷெ சபை மண்டபத்தில் சேக்கிழார் சுவாமிகள் குருபூசைத்தினம்கொண்டாடப்பட்டது. அன்றைய கூட்டத்திற்குத் திரு. நம. சிவப்பிரகாசமவர்கள் தலைமை வகித்தனர். பூசை நிகழ்ந்தபின்னர் திரு. குல.சபாநாதனவர்கள் சுவாமிகள் வரலாற்றினையும் பெருமையையுங் குறித்து ஓர் சொற்பொழிவாற்றினர். பின் திரு. க. பொன்னுத்துரை யவர்கள் சேக்கிழார் சுவாமிகள் பெருமையை எடுத்துக் கூறும் சில தோத்திரங்களைப்பாராயணம் செய்தனர். அதன்

பின்னர்த் தலைவர் சில குறிப்புரை கூறியதும் அங்கு சமூகமளித்த அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டுத் தேவார பாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவேறிற்று. கடிதம்.

---

## பட்டின சபைகளுக்குக் கொமிஷனர்கள்

### தலைவரின் வேலையைக் குறைக்க ஆலோசனை

நுவரெலியா, யூன் 10

பட்டினசபைத் தலைவர்கள் காரியாலய வேலைகளுக்காகத் தினந்தோறும் சில மணி நேரம் செலவழிக்கவேண்டியிருப்பதால் அக் கஷ்டத்திலிருந்து தலைவர்களை விடுவிக்க முக்கியமான பட்டினசபைகளுக்கெல்லாம் கமிஷனர்கள் நியமிக்க வேண்டுமென்று நுவரெலியா பட்டினசபைத் தலைவர் திரு. ஜே. ஜே. கனகரத்தினம் ஸ்தல ஸ்தாபனக் கமிஷனருக்குச் சிபார்சு செய்திருக்கிறார். இலங்கையில் ஸ்தல ஸ்தாபன சேவிஸ் ஒன்றை ஏற்படுத்தத் திட்டம் போடுவதற்கு ஸ்தல ஸ்தாபனக் கமிஷனர் தகவல் கேட்டு எல்லாப் பட்டினசபைத் தலைவர்களுக்கும் எழுதியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் முறையில் திரு. கனகரத்தினம் மேற்கூறியபடி தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார். திரு. கனகரத்தினம் மேலும் கூறுவதாவது:-

பட்டினசபைத் தலைவர்களிற் பெரும்பாலோர் வழக்கறிஞர்களாகவோ, வியாபாரிகளாகவோ இருப்பதால் அவர்களால் பட்டினசபை வேலைகளுக்காகச் சிலமணி நேரத்திற்கு மேற் செலவழிக்க முடியாது. ஸ்தல ஸ்தாபனச் சட்டப்படி சபைத் தலைவர்கள் காரியாலய வேலையைக் கவனிக்கவேண்டும். கௌரவ தலைவர்களுக்கு அம்மாதிரி வேலைகளைக் கொடுப்பது சரியல்லவென்பதுடன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களாகையால் அவர்களுடைய சொந்தத் தொகுதிகளிலுள்ளவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள நேரிடும்பொழுது அவர்களுடைய நிலைமை மிகவும் கஷ்டமாகி விடுகிறது.

அதனுல், காரியாலய வேலைகளிலிருந்து சபைத் தலைவர்கள் விடுவிக்கப்பட வேண்டியது மிக அவசியமாகும். சிறு பட்டினசபைகளில இவ்வேலைகளைச் சபைக் காரியதரிசிகளுக்கே கொடுத்துவிடலாம், பெரிய சபைகளுக்கு கமிஷனர்கள் நியமிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். கமிஷனருக்கு அடுத்தபடியாக அக்கௌன்டனட் காரியதரிசி ஒருவரை நியமிக்கலாம்,

தற்பொழுதுள்ள நிலைமையில் பெரிய பட்டின சபைகளிலுள்ள காரியதரிசிகள் நிதிச் சட்டப்படி எதிர் பார்க்கப்படும் அலுவல்களைச் செய்வது மிகவும் கஷ்டமாகும், கமிஷனர்கள் நியமிக்கப்படுவார்களேயானுல் அதிக வேலையால் அல்லற்படும் காரியதரிசிகளுக்குச் சிறிது சௌகரியமாகவிருக்கும்.

### அதிகாரிகள் நியமனம்

கிளாக்குமார்கள் பரீக்ஷை போன்ற பரீக்ஷையொன்றைக் கல்வி இலாகாவைக் கொண்டு நடத்தி அப் பரீக்ஷைகளில் தேறுபவர்களைப் பட்டினசபைகளுக்கு நியமனம் செய்யவேண்டும்.

---


இலங்கை சேம வங்கி

இவ்வங்கியிற் பணம் சேமிப்போரின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நிகழும் 1943ம் ஆண்டு ஆனிமாதம் 30ந்திகதி புதன்கிழமை பிற்பகல் 4-45 மணிக்கு சேம்பர் ஓவ் கொமேர்ஸ் கட்டிடத்தின் பொதுக்கூட்ட அறையில் நடைபெறும்.

(ஒப்பம்) எச். ஏ. காமர்,
காரியதரிசி.

ஆனி௴ 8உ 1943, கொழும்பு.

G 10. 14-6-43


---

## பாலைக் கலி

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஊறுநீர் அடங்கலின் உண்கயங்
 காணுது
சேறு சுவைத்துத்தஞ் செல்லுயிர்
 தாங்கும்
புயல்துளி மாறிய போக்கரு
 வெஞ்சுரம்" (செய் ௯௩)

எனப் பாலைநிலத்தின் பண்பு ஓவியமாகத் தீட்டப்பட்டிருத்தல் காண்க. வேறோரிடத்து (செ.உரு) இச்சுரம் மிக்க வேடிக்கையாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது. ஆண்டு ஆசிரியர் எடுத்தாளும் உவமையும் பழைய வரலாற்றை நினைப்பூட்டி இன்பம் பயப்ப தோன்றுகும், அஃது இது.

"அச்சுரமோ குன்று அழலும் வெய்தாகிய சுரம். அக் குன்றோ காட்டுப் பரப்புச் சூழ்ந்த குன்று. அக்காட்டுப் பரப்பிலோ மூங்கிற் புதரும் தீப்பற்றிக் கொள்ள, உலர்ந்த மூங்கிலையுடைய உயர்ந்த மலையைச் சூழ்ந்த முழங்குகின்ற அழலைக், கணையத்தை மாறுபடுகின்ற தடக்கையினை யுடைய தன் இனத்தைக் காக்கும் அழகினையுடைய வேழம் அதர்படும்படி மிதித்துத் தம்முடைய திரளோடே கூடிப் போகுந் தன்மையை யுடையது. இஃது எதுபோலு மெனின் திருதராஷ்டிரனுடைய மக்களுள் மூத்த துரியோதனன் சூட்சியாலே, ஐவரென்று உலகத்தார் புகழுந் தருமர் முதலியோர் உள்ளேயாக, கையாலே புனையப்பட்ட அரக்கு மாளிகை விரைந்து நெருப்புச் சூழ்ந்து கொள்ள, புகையழலையுடையதாகிய ஒள்ளிய உருவத்தினையுடைய அவ்வரக்கில்லை அந்த வீமசேனன் அழித்துத் தன் உள்ளத்திற்குப் பொருந்தின சுற்றத்தோடே பிழைக்கப் போகின்றவனைப் போலும்" என்றிவ்வாறு கூறியமை எத்துணை இன்பம் பயக்கும் என்பது சிந்திக்கத் தக்கது. இவ்வாறே பாலைநிலத்தன்மையைக் கூறும் பகுதிகளைப் பிறசெய்யுட்களிலுங் கண்டு மகிழ்க.

இனி, ஆறுஞ் செய்யுட்கு மீளவும் வருவாம். கடுமையை யுடையது காடு என்றும், அதில் யான் செல்லுந் தாத்தே னல்லே னென்றும் (என்னையுடன் கொண்டுசெல்ல மறுத்தால், யான் உயிர்வாழேன் என்பதை) அறியாதிருந்தீர் போல (உடன் செல்லுதலை மறுத்த) இம் மொழிகளைக் கூறுகின்றீரே. இம் மொழிகளாற் பெற்ற பயனென்? இவ்வாறு நீர்கூறும் கூற்று நன்றுடையதன்று. இனி, எம்மிடத்து அன்பு நீங்கப் பிரிதலைக் கருதாதீர். அச்சுரத்தின்கண் ஏற்படுந் துன்பத்திற்கு எம்மையுந் துணையாகக் கொண்டு நும்மொடு போதலை ஆராய்வீராக அங்ஙனம் ஆராயின், அதுவல்லது வேறோர் இன்பமும் எமக்கு உண்டோ?"

என்நீர் அறியாதீர் போல
 இவை கூறின்
நின்நீர வல்ல நெடுந்தகாய்!
 எம்மையும்
அன்பறச் சூழாதே; ஆற்றிடை
 நும்மொடு
துன்பந் துணையாக நாடின்
 அதுவல்ல(து)
இன்பமும் உண்டோ எமக்கு"

என்னும் பகுதி தலைவியின் அன்பு எத்தகையது என்பதைக் காதலாமலகம் போற் காட்டுகின்றதன்றோ? அன்புகனிந்த உள்ளத்தோடு-உருக்கத்தை விளைக்கத்தக்க முறையில்-வெஞ்சுரத்தின் கடுமையைத் துரும்பென மதித்து அற்பமும் பொருட்படுத்தாது, எத்துணைத் துன்பமும் தலைவனுெடு கலந்து அநுபவிக்கின் தமக்கு இன்பமாகும் என்றும், அதினும் பார்க்க வேறோர் இன்பமும் இல்லை என்றும் கருதும்-கூறும்-அவள் பெற்றி உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுந் தரத்ததன்றோ?

அயோத்தியா காண்டத்தில், நகர்நீங்கு படலத்தில், வனம்புகப் புறப்பட்ட இராமன், சீதையிடஞ் சென்று,

"பொருவில் எம்பி புவிபுரப்
 பான்புகல்
இருவர் ஆணையு மேத்தினென்
 இன்று போய்க்
கருவி மாமழைக் கற்றடங்
 கண்டு நான்

வருவென் ஈண்டு வருந்தலை நீ" என்றான். அதனைக் கேட்ட சீதை, நாயகன் வனம் நண்ணலுற்றானென்றும் வருந்தவில்லை; மண்ணிழந்தானென்றும் வருந்தவில்லை. "நீ வருந்தாதே யான் வனஞ் செல்கின்றேன்" என்று இராமன் சொன்ன சொற்களைக் கேட்டே வருந்தினுள், அச்சொல்லே செவிசுட, அவள் தேம்புவாளாயினுள் என்று கம்பர் அழகுறச் சொல்லுகின்றார். துறந்து போமெனச் சொற்றசொற் றேறுமோ?' என்று படிப்போரையும் வினவுகின்றார், "ஈண்டுநின், பிரிவினுஞ் சுடுமோ பெருங்காடு?" என்று சீதை இராமனை வினவுவது எத்துணை உருக்கம் வாய்ந்தது. சீதை உடனே மனைபுகுகின்றாள். புனையும் மரவுரியைத் துணிந்து புனைந்து கொள்கின்றாள். (இதற்கு என்செயலாமென்று) நினையும் இராமன் பின் வந்து அவனது நீண்ட கரத்தைப் பற்றிய கையினளாய் அயலிலே நிற்கின்றாள். இச் சம்பவம் ஈண்டைக்கு நினைவு கூரத்தக்க தொன்றன்றோ?

---

## சுழிபுரம் ஐக்கியசங்கப் பாடசாலை

### புதுக்கட்டிடத் திறப்புவிழா

சுபானு௵ வைகாசி௴ 24௳ (7-6-43) திங்கட்கிழமை பிற்பகல் 7 மணியளவில் வடமாகாணத் தலைவர் கனம் எம். பிரசாத் அவர்கள் மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக அழைக்கப்பெற்று சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலைப் புதுக் கட்டட வாசலுக்கு வந்தார்கள். புதிய பிரசங்க மண்டபம் வகுப்பறைகள் முதலியன சுற்றிப் பார்க்கப்பெற்றன. மேடைமீது தலைவர் அமர்ந்ததும், அவருக்கும், உபகாரிகள்... ஐக்கியசங்கர்கட்கும் பாடசாலை மனேஜர் ஸ்ரீமாக். வ. பொன்னம்பலம் அவர்கள் மாலை சூட்டினர். தேவாரம், வாழ்த்துப்பாடல்முடிந்ததும், தலைமை ஆசிரியரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பெற்றது. பின் தலைவர் அவர்கள் தமது ஆரம்பவுரையில் பாடசாலையின் நிலைமையை நன்கு விளக்கி எல்லோரும் போதிய உதவியளிக்குமாறு கேட்டுக்கொண்டார். பின் வடபெரும்பாகப் பிரதம ஆங்கில வித்தியாதரிசி ஸ்ரீமாக். S. U. சோமசேகரம் அவர்கள் தமிழ்ப் பாடசாலையின் தோற்றத்தையும் தமிழ்க் கல்வியின் மதிப்பையும் ஒப்பிட்டு மிகவும் வியந்து பேசினுர்கள். பின் பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்கள் தமது பிரத்தியட்சத்திலேயே பாடசாலை வளர்ச்சியுற்றுத் தோற்றம் நிலையை ஆதியிலிருந்து கூறி வியந்து வாழ்த்தினர்கள். காரியதரிசியால் வந்தனம் கூறப்பெற்றது. மாணவர்களது சங்கீ நடனங்கள் காட்டப்பெற்றன. வடபெரும்பாகவித்தியாதரிசி முதலியோரது வாழ்த்துரைகள் வாசிக்கப்பெற்றுத் தேவாரத்துடன் விழா இனிது நிறைவெய்திற்று.

—கடிதம்.

## பண்டகசாலைச் சங்கங்களின் மகாநாடு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியாபார ஸ்தாபனத்துக்கும் ஸ்தலடிப்போவுக்கும் ஒன்றுக்கொன்று சமமான ஏற்பாடு இல்லை. அதனுலும் மேலும் அதிகமான கஷ்டங்களை அநுபவிக்க நேரிடுகின்றது. ஆதலால், எங்கள் ஒப்பந்த முறையீடுகளையும் கொடுக்குஞ் சாமான்களையும் நன்கு ஆராயும்படி ஐக்கிய சங்கங்களின் உதவி றிஜிஸ்ட்ராருக்கு அதிகாரமளிக்கும்படி இம்மகாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றது.

## மறவன்புலோ விநாயகர் மகாகும்பாபிஷேகம்

நிகழும் சுபானு வருஷம் ஆனிமீ 4ந் திகதி (18-6-43) வெள்ளிக்கிழமை பகல் 12-17 மணி தொடக்கம் 1-29 மணிக்குள்ளாக வரும் கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில் மறவன்புலோவில் வள்ளற்குளமெனுந் திருப்பதியில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் விநாயகப்பெருமானுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறும். —கடிதம்.

## உயர்தர வைத்திய படிப்பு

தற்காலிகமாக இலங்கையில் ஏற்பாடு

தற்பொழுது வைத்திய சுகாதார இலாகாவிலுள்ள டாக்டர்களுக்கு இலங்கை சர்வகலாசாலை விரைவில் ஒரு பயிற்சிமுறையை ஆரம்பித்து வைக்குமென்று தெரிகிறது. இப்பயிற்சிமுறை சுமார் ஒன்பதுமாதங்கள் நடைபெறலாம். வழக்கமாக இவ்வதிகாரிகள் வேலை உயர்விற்காக இங்கிலாந்துசென்று பயிற்சி பெறும் ஒரு முறைக்குப் பதிலாகவே தற்காலிகமாக இப்புதிய பயிற்சி முறையை இங்கே ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்தமாதஆரம்பத்தில்இப்பயிற்சி முறையை ஆரம்பித்து வைப்பதற்கு தக்கபடி நிதி ஏற்பாடுகள் செய்யப்படுமென்று நம்பப்படுகிறது.

இலங்கை வைத்தியக் கல்லூரியில் பட்டம் பெற்ற பிறகு டாக்டர்கள் மேற் படிப்பிற்கு இங்கிலாந்திற்குச் செல்ல முடியாமல் இருப்பதால் அவர்களின் மேற்படிப்பிற்கு இலங்கையிலேயே ஏற்பாடுசெய்ய வேண்டுமென்று வைத்திய சுகாதார மந்திரி கேட்டுக்கொண்டார் அவருடைய வேண்டுகோளின்பேரிலேயே இப்புதிய பயிற்சி முறைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வைத்திய சுகாதார இலாகாவிலுள்ள டாக்டர்கள் யுத்தம் காரணமாக மேற் படிப்பிற்கு இங்கிலாந்திற்குச் செல்ல முடியாமலிருப்பதால் அப்படிப்பிற்கு இலங்கையிலேயே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று காலஞ்சென்ற டாக்டர் எஸ். ஸி. பால் 1940ம் வருடத்தில் சுகாதார மந்திரிக்குத்தெரிவித்தார்.

இலங்கையிலேயே மேற்படிப் படிப்பிற்கு ஒரு ஏற்பாடு செய்வதென்று வைத்தியக் கல்லூரிசபையின் உப கமிட்டி சிபார்சு செய்திருந்த ஆலோசனையை 1941-ம் வருடம் செப்டம்பர் மாதத்தில் வைத்திய சுகாதார அரசாங்க நிர்வாகக் கமிட்டி அங்கீகரித்தது. சர்வகலாசாலை ஆரம்பமானவுடன் இவ்வாலோசனை அதன் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது. சர்வகலாசாலை இந்த யோசனையை ஏற்று மேற்படிப்பிற்கு ஏற்பாடு செய்ய இப்பொழுது ஒப்புக் கொண்டிருக்கிறது.

## நன்கொடை

உரும்பராய் கிழக்கு அருணாசலம் செல்லையா என்பவரின் கனிஷ்ட புத்திரனும், கித்துல்கலை ஆஸ்பத்திரிக்கு உணவு கொடுக்கும் கன்ருக்றின் பகுதிக்கு மனேஜராயுமிருந்த திரு. செ. பாலசெங்காதரவடிவேலு என்பவர் தமது 23-ம் வயதில் தம்மைப் பீடித்த சுரநோய் காரணமாக 10-5-43 ல் கித்துல்கலை பென்னுமிடத்திலேயே தேகவியோகமெய்தினர். அன்னரின் ஈமக்கிரியைகள் அவருடைய பிதாவினால் அவ்விடத்தில்விதிப்படி செய்யப்பெற்றன. அந்தியேட்டி 9-6-43 ல் கீரிமலையில் பல சுற்றமித்திரர்சமூகத்திலே வெகுசிறப்பாகச்செய்யப்பெற்றது. அவ்வமையம் இந்துசாதனப் பத்திரிகைக்கு நன்கொடையாக வரித்தனுப்பிய ரூபா 2 பெற்ரும்.

மானேஜர்

## கொழும்புத் தமிழ்க் கழகம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை (6-6-43)பிற்பகல் 6½ மணி தொடக்கம், கொழும்புத் தமிழ்க்கழக ஆதரவில் தமிழ்இசை இயக்கத்தின சார்பாக சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை சிஷ்யன் திரு. பாலசுப்பிரமணியன் சங்கீதக் கச்சேரி நடத்தினார்கள். திரு. ஆர். முத்துஸ்வாமி வயலினும், திரு அச்சுதன் மிருதங்கமும் வாசித்தார்கள். ஏராளமான சங்கீதாபிமானிகள் கூட்டத்திற்குச் சமூகமளித்தனர்.

பாடகர், வேதநாயகம்பிள்ளை தாண்டவராய முதலியார், அருணாசலக் கவிராயர், ராமஸ்வாமி சிவன சுத்தானந்த பாரதி முதலிய தமிழ்ச் சாகித்திய கர்த்தாக்களின் கீர்த்தனங்களை ரஸபாவத்துடன் சிறந்த முறையில பாடினார்.

கழகக் காரியதரிசி திரு. சோ. நடராஜன் தமிழ்க் கழகம் தமிழ் இசையைப் பல்லாற்ருனும் ஊக்கப்படுத்தி வளரச் செய்ய வேண்டுமென்றும், இளம் பாடகர்களுக்கும் இசை அபிமானிகளுக்கும். இவ்வாறு அடிக்கடி கச்சேரிகளை நடத்தி உற்சாகமூட்ட வேண்டுமென்றும், இது எல்லாரையும் பொறுத்த கடமையாகுமென்றும் கூறினர். கச்சேரி நடத்தினேர்க்கும் சமூகமளித்தவர்களுக்கும் நன்றி தெரிவித்தார். இம்மாதம் 20 ம் தேதி நடக்கும் கூட்டத்தில் 'வீரகேசரி' ஆசிரியர் திரு. கே. ஹரன் பத்திரிகைத் தொழிலைப் பற்றிப் பேசுவார்.

—கடிதம்

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### செவ்வாய் ஜூன் 15

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில்செய்திகள் 8 திருப்புகழ்மணி†8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 வேதவல்லி ஸ்ரீநிவாசன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 கே சுப்ரமணியம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 முடிவு.

மாலை 5 கே சுப்ரமணியம் வீணை 5-45 இசைப்பயிற்சி 6 வேதவல்லி ஸ்ரீநிவாசன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40கிராமநிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 ஐயாவின் குடும்பம் தொடர்ச்சித்திரம் 8 மதராஸில் உள்ளபடி (கே பி சுந்தராம்பாள்பாட்டு) 9-15 ஸிதார்† 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45வியோலா வயலின் 10 இசை வேளை† 10-30 முடிவு.

## காணி ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

கடன்வழக்கு
இலக்கம் 196&197

யாழ்ப்பாணம் கொட்டடி M. C. தண்டாயுதபாணி, M. C. சந்திரசேகரம், கடன்பட்டவர்கள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிதலத்தில் 1943-ம் ஆண்டு, மே மாசம் 2ந் திகதி செய்த மேற்படி வழக்குத் தீர்ப்பிற் பிறப்பித்த கட்டளையின்படி கீழே காட்டப்பட்டுள்ள விபரங்களோடு கூடிய ஆதனங்கள், 1943-ம் ஆண்டு யூலாய் மாசம் 3-ந் திகதி சனிக்கிழமை பகல் 10 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிலேயே நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனங்களின் விபரம்

1 யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு 'அடியார்க்கு நல்லான் வரம்பு, தலைமடை, அடியார்க்கு நல்லான் குளத்தில் வரம்பு'என்னுங் காணி முழுவதும், நிலப்பரப்பு 18 லாச்சம் குழி 12½; கடைகள், கட்டடங்கள், இருகிணறுகளோடும், செய்கை பண்ணப்பட்ட நிலத்தோடும் பயிர்களோடுங் கூடியது.எல்லை கிழக்கு குளம், வடக்கு சிற்றம்பலம் சின்னையா, சபாபதி பெரியதம்பி என்னுமிவர்களுக்குரிய ஆதனம்; மேற்கு செம்மார் தெரு, தெற்கு பட்டினசங்கத்திற்குரியபொதுமலகூடமிருக்கும்நிலம்.

3 வண்ணார்பண்ணை மேற்கு 'ஆயிலடி' என்னுங் காணிமுழுவதும், நிலப்பரப்பு 1 லாட்சம் 3¾குழி; வீடு,கிணறு, செய்பயிர் முதலியவற்றோடு கூடியது; எல்லை கிழக்கு காதிறு லெப்பெய்நெயினமொகமத்என்பவருக்குரிய ஆதனம்,வடக்கு தெரு, மேற்குசின்னன்கைம்பெண் பாதும்மா நாச்சியாவுக் குரிய ஆதனம், தெற்கு ஒழுங்கை.

3 வண்ணார்பண்ணை மேற்கு 'பள்ளுவிலித் தோட்டம்' முழுவதும்; நிலைப்பரப்பு 4¾ லாட்சம் கிணறு, செய்பயிர் வான்பயிர்களோடு கூடியது எல்லை கிழக்கு C. தண்டாயுதபாணிக் குரிய ஆதனம். வடக்கு தெரு, மேற்கு நாகம்மாவிற்குரிய ஆதனம், தெற்கு தண்டாயுதபாணிக்குரிய ஆதனம்.

4 வண்ணார்பண்ணை மேற்கு 'பள்ளுவிலித் தோட்டம்'முழுவதும் நெற்பரப்பு 21 லாட்சம் எல்லை கிழக்கு கதிரேசர் சுப்பையாவுக்கும், சுந்தரம் பெண் சின்னத்தங்கத்திற்கு முரிய ஆதனங்கள் வடக்கு மேற்படி சின்னத்தங்கத்திற்கும் சுப்பிரமணியர் சிவசம்புவுக்கு முரிய ஆதனங்கள், மேற்கு தெரு, தெற்கு வேலு சின்னப்புவின் உரிமைக்காரருக்குரிய ஆதனம்.

5 வண்ணார்பண்ணை மேற்கு 'பள்ளுவிலித் தோட்டம்' முழுவதும் நெற்பரப்பு 24 லாட்சம் செய்பயிரோடும் ஒரு துரவோடுங் கூடியது. எல்லை கிழக்கு முத்துக்குமாரு சோமசுந்தரத்திற் குரிய ஆதனம், வடக்கு கதிரேசர் சுப்பையா, விஞசித்தம்பி கனகசபை, கனகசபை அருளம்பலம் என்னுமிவர்களுக்கும் பிறருக்கு முரிய ஆதனங்கள். மேற்கு வேலு செல்லப்பாவுக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம். தெற்கு முத்துக்குமாரு பெண் காமாட்சிக்கும், அம்பலவாணர் பொன்னம்பலத்திற்கு முரிய ஆதனங்கள்.

M. K. சங்கரப்பிள்ளை,
ஒப்படைகாரன்.

1-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம் 3-6-43.
Mis 54 14&28-6-43.

## மங்கையர்க்கரசியார் புராண ஆராய்ச்சி

3ம் பக்கத் தொடர்ச்சி

சுரந்து ஊட்டின தாயின் அன்பினும், 'பிள்ளை அழுதது' என்றதைக் கேட்டமாத்திரத்தே பால் சொரிகின்ற அன்னையின் அன்பே உயர்ந்தது என்பது கூறவேண்டா.

"கல்வியிற் சரஸ்வதி, அழகில் இலக்குமி, கருணையிற் பார்வதி" என்று சாதாரணமாகப் புகழ்வார்கள். ஏன், சிவபெருமானது திருவருளே பார்வதி என்பது சிறுவர்க்கும் தெரியும். கவிஞர் உயர்பொருளுக்கு உவமை சொல்லக்கூடிய குணிப்பொருள் கிடையாவிட்டால் குணமே உருவெடுத்து வந்ததாக உவமேயத்தைப்புகழ்வது மரபு என்பர். நுண்மாண் நுழை புலமுடைய கவியாராய்ச்சியாளர் திருவருளே வடிவாகிய பார்வதியும் அருட்டன்மையில் மங்கையர்க்கரசி அம்மையாருக்கு ஈடாகமாட்டாள் என்ருல் கவிச்சம்பிரதாயம் என் செய்யும்?

திருஞானசம்பந்த சுவாமிகளும் இவ்வம்மையாரைத் தமது தேவாரத்தில் "மங்கையர்க்கரசி வளவர் கோன்பாவை" என்று புகழ்ந்து பாடியிருக்கின்ருர்.

"வருநாள் என்றும் பிழையாத்
தெய்வப் பொன்னி
வளம்பெருக்க வளவர்குலம்
பெருக்குந் தங்கள்
திருநாடுபோற் செழியர் தென்
னுடு விளங்குஞ் சீர்விளக்கின்
செய்யசீறடிகள் போற்றி" வாழ்
வோமாக.

சுபம்

தேயிலை மார்க்கெற்றிங் இலாகாத் தேயிலை

யாழ்ப்பாணம் கோப்பறேற்றிவ் ஸ்ரோர்ஸ் லிமிற்றெட்டாரிடம் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு கொடுக்கப்படும்.

யாழ்ப்பாணம், கோப்பறேற்றிவ் ஸ்ரோர்ஸ் லிமிற்றெட்,
150, ஆஸ்பத்திரித்தெரு, பெரியகடை, யாழ்ப்பாணம்,
மார்க்கெற்றிங் இலாகாத் தேயிலைக்கு ஏஜெண்டுகள்.

Mis. 45. 3-6—28-6-43.

தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க்கொம்பனி)

கொளுக்கி ஓடுகள் எங்களிடம் விலைக்கு இருக்கின்றன

"புரோப்ரைட்டர்"—K. A. இரத்தினசிங்கம்,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Y 19. 4-3-42——3-3-43

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 14, June 1943.